# ஊடக அறிக்கை



தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை

+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257

communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2022.09.15 |


## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2022 ஓகத்து


**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2022 ஓகத்தில் அதிகரித்தன**

**தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், யூலையிலிருந்து உயர்வடைந்து 2022 ஓகத்தில் 49.6 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்தது, இருந்தும் நடுநிலையான ஆரம்ப அளவு மட்டத்திற்கு சற்றுக் கீழேயே காணப்பட்டது.** முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட மேம்பாடுகளுடன் தயாரித்தல் நடவடிக்கைகளின் வீழ்ச்சி வீதம் குறைவடைந்த அதேவேளை, உற்பத்தியும் புதிய கட்டளைகளும் மெதுவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தன. மேலும், மேம்பட்ட நடமாட்டங்களுடன் வழங்குநர் விநியோக நேரம் சுருக்கமடைந்தது.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 49.6**

**2022 யூலையுடன் ஒப்பிடுகையில 8.2 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு**

2022 யூலையுடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் ஒட்டுமொத்த உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகள் சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. எவ்வாறாயினும், பாரிய தயாரித்தல் துணைத் துறைகளைக் கருத்திற்கொள்கையில், புடவை மற்றும் ஆடைத் துறை தயாரித்தலில் உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகளில் அதிகரிப்பு அறிக்கையிடப்பட்டு ஒட்டுமொத்த வீழ்ச்சியினை சிறிதளவான மட்டத்திற்கு மட்டுப்படுத்திய அதேவேளை, உணவு மற்றும் குடிபானத் துறை தயாரித்தலானது 2022 யூலையில் உள்ளவாறு உற்பத்தியினையும் புதிய கட்டளைகளையும் அதே அளவிலேயே பேணியது. மாதத்திற்கு மாதம் அடிப்படையில் எரிபொருள் கிடைக்கும்தன்மை மேம்பட்டமையானது தயாரித்தல் நடவடிக்கைகளில் சாதகமாகத் தாக்கம் செலுத்தியதாக பல பதிலிறுப்பாளர்கள் வெளிப்படுத்தினர். அதேவேளை, 2022 ஓகத்தில் குறிப்பாக, ஊழியர் பற்றாக்குறையினால் அவ்வப்போது வருந்திய புடவை மற்றும் ஆடைத் துறைத் தயாரிப்புக்களில் தொழில்நிலை அதிகரித்தது. கொள்வனவுகளின் இருப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு வரவிருக்கும் மாதங்களில் எதிர்பார்த்திருந்த அதிகரித்த நடவடிக்கை அளவுகள் பிரதான காரணமாக அமைந்தன. சந்தையில் சிறிதளவு மேம்பட்ட வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கும்தன்மை, பொருட்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களைத் திறப்பதற்கு தம்மை இயலச்செய்தது என சில பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | யூலை | ஓக | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **41.4** | **49.6** | **+** | **வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 39.0 | 49.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 32.0 | 49.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 45.0 | 52.0 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 32.7 | 51.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 62.6 | 47.5 | - | நீட்சியிலிருந்து சுருக்கமடைகின்றது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் யூலையிலிருந்து 0.8 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2022 ஓகத்து 50.3 பெறுமதியினைப் பதிவுசெய்தது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் ரஷ்யாவின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் மேம்பட்ட அதேவேளை ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இது மெதுவான வீதத்தில் அதிகரித்தது. ஆயினும், யூரோ வலயம், ஐக்கிய இராச்சியம், சீனா ஆகிய நாடுகளின் தயாரித்தில் கொ.மு.சுட்டெண் முன்னயை மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் சீர்குலைந்தன.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2022 செத்தெம்பர் 14இல் உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் 30இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கும் யூரோ வலயம் உள்ளடங்கலாக முக்கிய பிராந்தியங்களுக்கும் கொ.மு.சுட்டெண்ணை தொகுக்கின்றது.*

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், 2022 பெப்புருவரியிலிருந்து முதற்தடவையாக 2022 ஓகத்தில் மேம்பாடொன்றினைக் குறித்துக்காட்டி கேள்விப்பக்கத் தடைகளுக்கு மத்தியில் படிப்படியாக மீளமையும் உறுதிப்பாடு பற்றிய மேம்பட்ட தொழில் எண்ணப்பாங்கினைப் பிரதிபலித்து வரவிருக்கும் மாதங்களில் தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான மிகவும் ஆக்கபூர்வமான சூழலொன்றினை எதிர்பார்க்கின்றது.

**பணிகள் கொ.மு.சுட்டெண், தொடர்ச்சியாக நான்கு மாதங்களாக வீழ்ச்சியடைந்த பின்னர் 51.7 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, 2022 ஓகத்தில் வளர்ச்சிப் புலத்திற்கு திரும்பலடைந்து.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புகளால் இவ்விரிவடைதல் தூண்டப்பட்டிருந்தது.

2022 யூலையுடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் குறிப்பாக, நிதியியல் பணிகள், உண்மைச் சொத்து, போக்குவரத்து மற்றும் ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் புதிய வியாபாரங்கள் விரிவடைந்தன.

எரிபொருள் நெருக்கடி தளர்விற்கு மத்தியில், நடமாட்டத்தில் அதிகரிப்பின் மூலம் தொடர்ச்சியாக நான்கு மாதங்களாக தொடர்ச்சியான வீழ்ச்சிக்குப் பின்னர் ஓகத்தில் பணிகள் துறையிலுள்ள தொழில் நடவடிக்கைகள் அதிகரித்தன. அதற்கமைய, பிரதானமாக நிதியியல் பணிகள், ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள், உண்மைச் சொத்து, காப்புறுதித் துணைத் துறைகளுடன் தொடர்புடைய தொழில் நடவடிக்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மேம்பாடுகளைக் காண்பித்தன. எவ்வாறிருப்பினும், பல பதிலிறுப்பாளர்களால் எடுத்துக்காட்டப்பட்டவாறு ஏனைய வழங்கல்பக்கத் தடைகள் சில துணைத் துறைகளின் தொழில் நடவடிக்கைகளை தொடர்ந்தும் எதிர்மறையாகப் பாதித்தன. இதற்கு மேலதிகமாக, உயர்வான பணவீக்கத்தினால் ஏற்பட்ட குறைவான கேள்வியானது தொழில் நடவடிக்கைகள் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகின்றது. அதற்கிணங்க, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துறை மாதகாலப்பகுதியில் முக்கிய வீழ்ச்சியினைக் காண்பித்தது.

புதிய ஆட்சேர்ப்புகளை நிறுத்துதல், ஏற்கனவே காணப்படுகின்ற ஒப்பந்தங்களை மீளப்புதுப்பிக்காமை மற்றும் ஓய்வுபெறுதல்கள் என்பவற்றுக்கு மேலதிகமாக அதிகரிக்கின்ற பதவிவிலகுதல்களின் காரணமாக தொழில்நிலை ஓகத்தில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை பிரதானமாக, ஊழியர்கள் எதிர்கொண்ட போக்குவரத்து இன்னல்கள் தளர்வடைந்தமையுடன் மாதகாலப்பகுதியில் நிலுவையிலுள்ள பணிகள் வீழ்ச்சியடைந்தன.


| மாறி | யூலை | ஓக | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **43.0** | **51.7** | **+** | **வீழ்ச்சியிருந்து அதிகரிகின்றது** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 41.2 | 57.3 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில் நடவடிக்கை | 36.9 | 53.1 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 36.7 | 43.3 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 52.2 | 47.8 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 48.0 | 57.2 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பொருளாதார உறுதிப்பாடு பற்றிய புதிய எதிர்பார்க்கைகளுடன் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மீட்சியடைந்தன. எவ்வாறாயினும், இறக்குமதித் தடைகள், வரிகளில் அதிகரிப்பு மற்றும் நாட்டில் பல்வேறு ஏனைய நிச்சயமின்மைகள் பற்றி நிறுவனங்கள் தமது கரிசனைகளை வெளியிட்டன.

**பணிகள்**
**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**51.7**

2022 யூலையுடன் ஒப்பிடுகையில் 8.7 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2022 யூலையின் 51.1 இலிருந்து 2022 ஓகத்தில் 49.2 இனைப் பதிவுசெய்து, உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளின் சுருக்கமொன்றினைக் காண்பிக்கின்றது.

சீனா, இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டிய அதேவேளை, யப்பான் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் இச்சுட்டெண் சீர்குலைவினை எடுத்துக்காட்டியது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[i], 2022 செத்தெம்பர் 14இல் உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

தொழில்நிலை : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை
கொள்வனவுகளின் இருப்பு : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்
நிரம்பலர் வழங்கல் நேரம் : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு
நிலுவையிலுள்ள பணிகள் : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள்

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.